were also informed that the terms and conditions under which the lands would be transferred can be settled after inspection of the land by the Government of India and its suitability is decided. The reply of the Government of India is awaited.

Minimum salary for archakas

* 58 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon the Minister for Religious Endowments be pleased to state whether any minimum salary has been prescribed for the archakas in temples under the control of the Hindu Religious Endowment Department?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை, ஐயா, கோவில் களின் வருமானத்திற்கு ஏற்றவாறு அர்ச்சகர்களின் ஊதியம் வழங்கப்படுகிறது.

திரு. கே. சகாதேவ கண்டர் : கோவிலில் அர்ச்சனை செய்யக் கூடியவர்களுக்கு இதுவரையிலும் ஊதியம் எதுவும் கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் வேலையும் மிகக் கடுமையானதாக இருக்கிறது. அதோடு அவர்கள் கடவுளை நம்பியிருப்பதினாலும் இனிமேலாவது இந்த அரசாங்கம் அவர்களுக்கு சிறிய அளவு ஊதியமாவது கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அர்ச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஊதியம் கொடுக்கப் படவில்லை என்று சொன்னார்கள். எங்களுக்குத் தெரிந்தமட்டில் அந்த அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. உறுப்பினர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட இடத்தைப் பற்றிச் சொல்வார்களானால் அது சம்பந்தமாக பரிசீலனை செய்யலாம். இனிமேலாவது கொடுப்பார் களா என்று கேட்டார்கள். இதுவரையில் கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கேள்விக்கு இடமில்லை என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு கோவிலும் தனி யூனிட் டாக, அந்தந்தக் கோவிலுக்கு வருகிற வருமானத்தை வைத்துக் கொண்டு அங்கங்கே செய்கிறார்கள். ஒரு கோவிலில் ஒரு அர்ச்ச கருக்கு ஐந்து ரூபாய் கிடைக்கும், இன்னொரு கோவிலில் ஒரு அர்ச்ச கருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் கூட கிடைக்கலாம். ஆகவே அதை வைத்துக்கொண்டு சொல்லமுடியாது.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி : கோவில் அர்ச்சகர் களுக்கு அர்ச்சனைச் சீட்டு, மா விளக்கு போன்ற காரியங்களுக்காக அந்த அர்ச்சகர்களுக்குக் கொடுக்கப்படுகிற விகிதாசாரம், பர்சென் டேஜ் அதிகமாக இருக்கிறது. ஆகவே, கோவிலுக்கு வருகிற வருவாய் குறைவாக இருக்கிறது. ஆகவே மாநிலம் பூராவிற்கும் எல்லாக் கோவில்களிலும் இந்த அர்ச்சனை சீட்டுகளிலிருந்து கொடுக்கப்படுகிற விகிதாசாரம் குறைந்தபட்சம் இவ்வளவுதான் என்று நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இது ஆங்காங்கு வருகிற பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. அதிகமாக பக்தர்கள் வருவதைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல என்று நினைக் கிறேன்.